1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இருக்கிற நீரை வைத்துக்கொண்டு கள்ளத் திரி வரைக்கும், அந்த அணைக்கட்டுப் பகுதி வரைக்கும் தண்ணீரைத் திறந்து விடுவதற்கு—இப்போது நாங்கள் 5-11-1987 ஆம் தேதியன்று தண்ணீரைத் திறந்து விட்டிருக் கிறோம். இப்போது அங்கே பெய்கிற மழையை நாங்கள் சரி பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீரின் வரத்து கொஞ்சம் கூடிய வுடனே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துக் கட்சி களின் சார்பாகவும் இதற்குக் கோரிக்கை விட்டிருக்கிறார்கள்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, வைகை ஆறு உற்பத்தியாகிற வாசநாட்டுப் பகுதிகளில் மழைக் காலங் களில் ஏற்படுகிற வெள்ளச் சேதங்கள் அதிகமாக இருக்கிறதால், நடந்த வெள்ள காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் கள் தொகுதியான ஆண்டிப்பட்டியில் மேலவைகை என்று ஒரு அணைக்கட்டுத் திட்டம் 40 கோடி ரூபாய் செலவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. வெள்ள நீரைத் தேக்குகிற இந்தத் திட்டத்திற்கு அரசு விரைவாக அனுமதியளிக்குமா என்று அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீல னைக்குப்பின் கைவிடப்பட்டது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் படுக்கை அணை கட்டுதல்.

28—(*வினா எண். 12293) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றி யம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், மங்கநல்லூர் அருகே வீரசோழன் ஆற்றின் குறுக்கே கண்டமடை வாய்க்கால் தலைப்பில் ஒரு பெட்டாம் கட்டுவதற்கு கருத்துரு ஆய்வில் உள்ளது.

வெள்ளாற்றின் குறுக்கே அணை.

29—(*வினா எண் 12616) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, அரிமளம் மாமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமளம் மாமடக்கி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ரூ. 36.30 இலட்சத்தில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. த. புஷ்பராசு : தலைவர் அவர்களே, இந்த அணை கட்ட வேண்டுமென்று நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்சமயம் இந்த அணை கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், பெருமுயற்சி எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விரைவாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அந்த மக்களுக்குச் சேவை செய்கின்ற அளவிற்கு இந்த அணைக்கட்டு வேலைகள் துரிதப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.